# பிரசார் பாரதி
# அகில இந்திய வானொலி, சென்னை-4

14 10 2026 12 40

புதன்கிழமை நண்பகல்

ஆகாஷ்வாணி

*(Tune)*

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் கடைகோடி மக்களுக்கும் சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் கிடைக்கும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தோ-பசிபிக் பகுதியில் அமைதியை நிலைநாட்ட ஆசியான் உறுப்பு நாடுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. உலகளாவிய செமி கண்டெக்டர் துறையில் சைபர் பாதுகாப்பு முக்கியமாக விளங்குவதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார்.

4. அதிகரித்து வரும் பெட்ரோலியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காகவே ரஷ்யாவில் இருந்து டீசல் இறக்குமதி செய்ய முடிவெடுத்துள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Malvika Bansod காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><>

நாட்டின் கடைகோடி மக்களுக்கும் சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் கிடைக்கும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியாவின் கட்டுரையை தமது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள அவர், சமையல் எரிவாயு இணைப்புகள், சுகாதாரம், கடன் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

வரும் 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா எழுதியுள்ள கட்டுரையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு நாட்டின் வளர்ச்சிக்காக மக்களின் பங்களிப்புடன் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளதையும், பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

<><><><><><><>

இந்தோ பசிபிக் பகுதியில் அமைதியை நிலைநாட்ட ஆசியான் உறுப்பு நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் ஆசியான் - இந்தியா பாதுகாப்பு கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், நாட்டின் இந்தோ - பசிபிக் கொள்கையில் ஆசியான் முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்தார்.

இந்திய பெருங்கடலும் தென்கிழக்கு ஆசியான் கடலும் கப்பல் போக்குவரத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், இப்பகுதிகளின் கடல்சார் பாதுகாப்பு நமது பொறுப்பு என்றும் கூறினார்.

நடப்பாண்டு ஆசியான் - இந்தியா கடல்சார் ஒத்துழைப்பு ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதையும், அவர் சுட்டிக்காட்டினார்.

கடல் கொள்ளையர்களை கட்டுப்படுத்தவும், சட்டவிரோத மீன்பிடிப்பை தடுக்கவும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கடல்சார் பாதுகாப்பிற்கு இந்தியா - ஆசியான் முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் சோழர்களும், பல்லவர்களும் வணிக உறவுகள் வைத்திருந்ததை திரு. ராஜ்நாத் சிங் சுட்டிக்காட்டினார்.

<><><><><><><>

உலகளாவிய செமி கண்டெக்டர் துறையில் சைபர் பாதுகாப்பு முக்கியமாக விளங்குவதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் *Bloomberg* பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய அவர், செமி கண்டெக்டர் வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் இந்தியா பங்கு நாடாக உருவெடுத்து வருவதாக கூறினார்.

நிலையான உற்பத்திக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

இந்தியா தற்போது மொபைல் போன் உதிரிபாகங்கள் உற்பத்தியில் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்துள்ளதுடன் ஏற்றுமதியும் செய்து வருவதாக அவர் கூறினார்.

மத்திய அரசு உள்நாட்டு உற்பத்தியை வலுப்படுத்தி உலகளாவிய பொருளாதார நெருக்கடியில் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<><><><><><><>

காசநோய் இல்லாத இந்தியா இயக்கத்தின்கீழ் 20 லட்சம் பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த இயக்கத்தின் கீழ், 28 கோடி பேருக்கு நோய் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் 92 சதவீதம் பேருக்கு காசநோய் தடுப்பு சிகிச்சை வசதி அளிக்கப்பட்டுள்ளதாக இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் 78 சதவீதம் பேருக்கு மட்டுமே காசநோய் தடுப்பு சிகிச்சை வசதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் முதல் 2024 ஆம் ஆண்டு வரை நாட்டில் காசநோய் அறிகுறிகள் 21 சதவீதம் குறைந்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசநோயை ஒழிக்க மத்திய அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

<><><><><><><>

பீகார் மாநிலம் வைஷாலி மாவட்டத்தில் நேரிட்ட படகு விபத்தில் 13 பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், இந்த விபத்து மிகுந்த மனவேதனை அளிப்பதாக கூறியுள்ளார்.

உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், இந்த படகு விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய வேண்டும் என்று பிரார்த்திப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், இந்த படகு விபத்து மிகுந்த வேதனை அளிப்பதாக கூறினார்.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

<><><><><><>

“மக்கள் நலனே தேசத்தின் நலன்” என்பதை, தாரக மந்திரமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது

தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

இது தொடர்பான சிறப்புத் தொகுப்பில் இன்று, *Dholera* சிறப்புத் பொருளாதார முதலீடு மண்டலம் குறித்த பார்வை இடம்பெறுகிறது.

*(வாய்ஸ் ஓவர் - Voice Over - 66 Sec.)*

*குஜராத் மாநிலம் அகமதாபாத் மாவட்டத்தில் Dholera சிறப்பு பொருளாதார முதலீடு மண்டலம் தொடங்கப்பட்டுள்ளது.*

*திரு. நரேந்திர மோடி குஜராத் முதலமைச்சராக இருந்த போது, அவரது தொலைநோக்கு பார்வையில், இந்த முதலீடு மண்டலத்தை உள்ளடக்கிய ஸ்மார்ட் சிட்டி குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.*

*Khambhat அருகே அமைக்கப்பட்டுள்ள இந்த ஸ்மார்ட் சிட்டியில் சாலைகள், குடிநீர்வசதி, மின்சாரம், இணையதள வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.*

*நாட்டின் முதல் செமிகண்டெக்டர் உற்பத்தி நிறுவனம் இங்கு அமைக்கப்பட உள்ளது.*

*நவீன உற்பத்தி மையமாக Dholera சிறப்புத் பொருளாதார முதலீடு மண்டலம் உருவெடுத்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*இங்கு நவீன கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளதாக குஜராத் முதலமைச்சர் திரு. புபேந்தர் படேல் குறிப்பிட்டுள்ளார்.*

நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க கடல்சார் நகரமான Dholera தற்போது வளர்ச்சியடைந்த இந்தியாவின் எடுத்துக்காட்டாக நவீன உற்பத்தி நகரமாக மேம்பட்டுள்ளது என்றால் அது மிகையல்ல.

<><><><><><><>

பிரதமரின் பயிர்க்காப்பீட்டுத் திட்டம் நாடு முழுவதும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தமிழகத்தின் நாகை மாவட்டத்தில், இத்திட்டத்தின்கீழ் சம்பா, தாளடி நெற்பயிர்களை காப்பீடு செய்ய அடுத்த மாதம் 15 ஆம் தேதி கடைசி நாளாகும்.

விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளுக்கு காப்பீடு நிதியுதவி வழங்கி பாதுகாக்க இத்திட்டம் உதவுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><><>

அதிகரித்து வரும் பெட்ரோலியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காகவே ரஷ்யாவில் இருந்து டீசல் இறக்குமதி செய்ய முடிவெடுத்துள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக ரஷ்யாவிடம் இருந்து 3 லட்சம் டன்னும், அடுத்த மாதம் 5 லட்சம் டன்னும் டீசல் இறக்குமதி செய்ய உள்ளதாக திரு. ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் ரஷ்யா டீசல் விற்பனை செய்வதன் மூலம் பெட்ரோலியப் பொருட்களின் விலை குறைய வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் அமெரிக்காவிற்கு மட்டுமின்றி உலக நாடுகளும் பயன் அடையும் என்றும் திரு. டோனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு ஏப்ரல் 7 ஆம் தேதி வரை ரஷ்யாவில் இருந்து டீசல் இறக்குமதி செய்வதற்கான தடை உத்தரவு தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

<><><><><><><>

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Malvika Bansod* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர், 21-7, 21-14 என்ற செட்கணக்கில் மலேசியாவின் *Ler Qi Eng* -யை வென்றார்.

-----------

சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Arnav Paparkar* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--------------